www.tamilarangam.net

கம்பன்

இலக்கிய இலக்கணத் திங்களிதழ்

திருவள்ளுவர் ஆண்டு உ0௩உ-இரட்டை-க (15-06-2001)

ஆசிரியர்

கவிஞர் கி. பாரதிதாசன்

ஒருநாள் மறவேனோ!

இன்பத் தமிழே! இயக்கும் இறையே!
இனிமை படைத்தவனே!
துன்பப் பொழுதில் துணிவைக் கொடுத்துத்
துயரைத் துடைத்தவனே!
அன்பாம் நெறியை அமிழ்தாம் சுவையை
அளிக்கும் அருந்தமிழே!
உன்றன் புகழை உலகில் பரப்ப
ஒருநாள் மறவேனோ!

விலையில்லாத் திங்களிதழ்
வெளியீடு
கம்பன் கழகம், பிரான்சு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கம்பன்

இலக்கண இலக்கியத் திங்களிதழ்

ஆண்டு—க திங்கள்—சு

ஆசிரியர்

கவிஞர் கி . பாரதிதாசன்

கம்பன் குழுவினர்

இரவிச்சந்திரன்,கிரிதரன்,
சின்னையா கோபாலபிள்ளை,
சு . மோகன், நந்தா தாமோதரன்
மோரோ நடராசன்

வெளியீடு

கம்பன் கழகம்
பிரஞ்சு தமிழ் ஆய்வுக் கழகம்
பிரான்சு

அஞ்சல் தொடர்புகளுக்கு

Poète **K. BHARATHIDASAN**
6 RUE PAUL LANGEVIN
95140 - GARGES LES GONESSE
Tél: 01 39 86 86 53

வருகின்ற படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

தமிழ்ப்பணி

உலகமெலாம் அன்புநெறி தழைத்தோங்கவும், தமிழ்மொழி செழித்தோங்கவும், தமிழர் வாழ்வு சிறந்தோங்கவும், தமிழர்தம் கலைகள் படர்ந்தோங்கவும், 12 ஆண்டுகளாக அரும் பாடு பட்டு வருகிறது பிரான்சு சிவன் கோயில்.

இச்சங்கத்தை அமைத்து அதன் தலைவராகச் செயலாற்றி வருபவர் சிவனருட்செல்வர் சுகுமாற முருகையனார் ஆவார். அவரின் செயற்பாடும், இளைஞர் களை வழி நடத்தும் நற்றிறனும், தளர முயற்சியும், தெளிந்த சிந்தனையும், அன்புள்ளமும், அருண்மொழியும் போற்றுதற்கு உரியது.

பிரான்சு சிவன் கோயிலில் ஒவ்வொரு மாதமும் கூட்டு வழிபாடு நடத்தப்படுகிறது. வழிபாட்டில் 108 போற்றித் திரு அகவல் படிக்கப் படுகிறது.

மொழி வளர்ச்சியை, சமய வளர்ச்சியைத் தன் இரு கண்களாகக் கொண்டு பிரான்சு சிவன் கோயில் திகழ்கிறது. கருத்தரங்கம், கவியரங்கம், உரையரங்கம், பட்டி மன்றம், வழக்காடு மன்றம், நாட்டியம், கலை விழா ஆகிய நிகழ்ச்சிகளை இச்சங்கம் நடத்தி வருகிறது.

பிரான்சு சிவன் கோயில் 28—11—1999 அன்று திருவருட்பாத்திலகம் இரத்தின . சிவசண்முகனார் தொகுத்த "திருக்கோயில் வழிபாட்டுப் பாமலர்" என்ற நூலை வெளியிட்டது. 9—1—2000 அன்று புலவர் இரா . பன்னீர்ச்செல்வம் எழுதிய "பொங்கி வரும் புதுவெள்ளம்" என்ற நூலை வெளியிட்டது.

அடியார்க்கு அன்பர் கோவிந்தசாமி செயராமன் தொகுத்த "வழிபாட்டுப் பாமலர்கள்" 1—2—3 ஆகிய நூலை வெளியிட்டது. 22—4—2001 அன்று பேராசிரியர் சக்திப்புயல் எழுதிய "பாரீஸ் முதல் பாரிமுனை வரை" என்ற நூலை வெளியிட்டது.

"தமிழ்வாணி" முத்திங்களிதழையும், "கம்பன்" இலக்கண இலக்கியத் திங்களிதழையும் இச்சங்கமே அறிமுகம் செய்து செந்தமிழின் சீரைப் பரப்பி வருகிறது.

இந்தியாவில் இருந்து வருகின்ற தமிழ்ச் சான்றோர்களையும், கலைஞர்களையும் வரவேற்றுச் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

தமிழ்ப்பணியில் முன்னணியில் நிற்கும் பிரான்சு சிவன் கோயிலைத் தமிழுலகம் என்றென்றும் வாழ்த்தும். பிரான்சு தமிழர் வரலாற்றில் இக்கோயிலின் பெயர் இடம் பெறும் என்பது உறுதி.

வாழ்க தமிழ்! வளர்க தமிழர்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிழை திருத்தம்

(பிழையாக எழுதப்படும் பேசப்படும் சொற்களையும், தொடர்களையும் இப்பகுதியில் திருத்தப்படும்)

வெய்யில் – வெயில்

வெய்யில் என்று எழுதுவது தவறாகும். தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் 377 – ஆம் நூற்பாவில் "வெயில் என் கிளவி மழையியல் நிலையும்" எனவும், திருக்குறள் – 77 ல் "என்பிலதனை வெயில் போலக் காயும்" எனவும் உள்ளது. எனவே வெயில் என எழுதுக.

வரட்சி – வறட்சி

வரட்சி என்று சிலர் எழுதுகின்றனர், வறட்சி என்று எழுதுவதே சரியாகும். வறு – பகுதியாகும். "நீர் அற வறந்த நிரம்பா நீளிடை" அகநானூறு செய்யுள் – 53, வரி – 5. "அறுகய மருங்கில் சிறுகோல் வெண்கிடை என்றூழ் வாடு வறல் போல்" புறநானூறு செய்யுள் – 75, வரி – 9.

விற்க்கப்படும் – விற்கப்படும

விற்க்கப்படும் என வல்லின மெய்கள் இரண்டு இணைந்து வருதல் தவறாகும். விற்கப்படும் என்பதே சரியாகும். நிற்க்க, முயற்ச்சி, ஆட்ச்சி போன்ற தவறுகளை, – நிற்க, முயற்சி, ஆட்சி என எழுதுக.

அருட்திரு – அருட்டிரு

டகரத்தின் முன் க, ச, ப எழுத்துகள் மயங்கும். அருள் + கொடை = அருட்கொடை என வரும். அருள்+ செல்வர் = அருட்செல்வர், அருள் + பணி = அருட்பணி ஆனால் டகரத்தின் முன் தகரம் மயங்குதல் இல்லை. அருள் + திரு = அருட்டிரு எனப் வரும்.

அஞ்சற்தலை – அஞ்சற்றலை

றகரத்தின் முன் க, ச, ப எழுத்துகள் மயங்கும். கல் + குகை = கற்குகை. கல் + சிலை = கற்சிலை. கல்+ பலகை = கற்பலகை ஆனால் றகரத்தின் முன் தகரம் மயங்குதல் இல்லை. நல் + துணை = நற்றுணை, கல்+ தூண் = கற்றூண், மடல் + தாள் மடற்றாள், அஞ்சல் + தலை = அஞ்சற்றலை என்பதே சரியாகும்

காற்பிடித்தான் – கால் பிடித்தான்

இரண்டாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழியில் ஈற்றுமெய்கள் வருமொழி வினையாயின் இயல்பாகும். எனவே காற்பிடித்தான் என எழுதுதல் தவறாகும். கால்பிடித்தான் என்பதே சரியாகும். (கண்கொடுத்தான், பொன்தந்தான், நாள்குறித்தான், தரம்பார்த்தான்)

வரவழைத்தேன் – வருவித்தேன்

புதுவையில் இருந்து பொருள்களை வரவழைத்தேன் என்று எழுதுவது தவறாகும். புதுவையில் இருந்து பொருள்களை வருவித்தேன் என்று எழுத வேண்டும். புதுவையில் இருந்து என் தங்கையை வரவழைத்தேன் என்று எழுதுவது பொருத்தமாகும்.

சென்ற இதழில் கண்டோம் – முன் இதழில் கண்டோம்

சென்ற இதழில் கண்டோம், சென்ற வகுப்பில் பார்த்தோம் என எழுதுகின்றனர். முன் இதழில் கண்டோம், முன் வகுப்பில் பார்த்தோம் என எழுதுதல் வேண்டும்.

ஐநூறு – ஐந்நூறு

ஐநூறு என்று எழுதுவது தவறாகும். ஐந்து + நூறு = ஐந்நூறு என்று வரும். "நான்கும், ஐந்தும் ஒற்று மெய் திரியா" தொல்காப்பியம் நூற்பா – 462, தொல்காப்பியம் 460 ஆம் நூற்பாவின் படி "து" கெட்டு, 462 ஆம் நூற்பாவின் படி "ந்" அப்படியே இருந்து ஐந்நூறு என வந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழந்தைப் பெயர்கள்

ஆண் குழந்தைப் பெயர்கள்

அ

அகரன்
அகன்
அகத்தியன்
அகத்தினியன்
அகநகன்
அகமுடைநம்பி
அகவழகன்(கு)
அகல்நெஞ்சன்
அஞ்சாநெஞ்சன்
அஞ்சனவண்ணன்
அஞ்சனமழகியபிள்ளை
அஞ்சி
அடல்எழிலன்
அடலேறு
அடியான்
அடியவன்
அடியார்க்கடியான்
அடியார்க்குநல்லான்
அடிகளாசிரியன்
அண்ணல்
அண்ணாமலை
அண்டிரன்
அதிகமான்
அதியமான்–நெடுமானஞ்சி!
அதியன்
அந்துவன்
அப்பர்
அப்பன்
அப்பூதி
அப்பாக்கண்ணு
அப்பாப்பிள்ளை
அம்பலம்
அம்பலவன்
அம்பலவாணன்
அம்பலத்தரசன்
அம்மையப்பன்
அமிழ்தரசன்
அமிழ்திறைவன்
அமுதன்
அமுதவாணன்
அரங்கன்
அரங்கநாயகன்
அரங்கவரசன்
அரங்கக்குரவன்
அரங்கண்ணல் (ன்)
அரசு
அரசர்க்கரசன்
அரசவிந்திரன்
அரசவேந்தன்
அரசிறைவன்
அரணமுறுவல்
அரிசில்கிழான்
அரியநாயகம்
அரிமா(ச்செல்வன்)
அருண்மொழி
அருண்மொழித்தேவன்
அருள்
அருளரசன்
அருளப்பன்
அருளாளன்
அருள்மொழியான்
அருட்செல்வன்
அருள்வேல்
அருட்கையன்
அருள்நம்பி
அருள்நிலவன்
அருமைச்செல்வன்
அருமைமணி
அருமையரசன்
அழகர்(ன்)
அழகரசன்(சு)
அழகப்பன்
அழகடியான்
அழகினுருவன்
அழகியசிற்றம்பலம்
அழகியபெருமாள்
அழகியமணவாளன்
அழகையன்
அழகுமுருகன்
அழகோவியன்
அழகர்நம்பி
அழகுநம்பி
அழகுருநம்பி
அழகுவேல்(ள்)
அழும்பில்வேள்
அளப்பெருங்கடலான்
அறவன்
அறம்வளர்த்தநம்பி
அறச்செல்வன்
அறவாழி
அறவாணன்
அறிவன்
அறிவாளன்
அறிவொளி
அறிவுடைஅரன்
அறிவுடைச்செந்தில்
அறிவுச்செல்வன்(ம்)
அறிவுடைநம்பி
அறிவழகன்(கு)
அறிவண்ணல்
அறிவுடையரசன்
அறிவுக்கடலான்
அறிவுருவோன்
அறிவுறுவோன்
அறுபடையோன்
அன்பு
அன்புச்செல்வன்
அன்பரசன்(சு)
அன்பண்ணல்
அன்பழகன்(கு)
அன்பினுருவன்
அன்பாளன்
அன்புமுருகன்
அன்புவாணன்
அன்புமன்னன்

ஆ

ஆச்செல்வன்
ஆசான்
ஆசைத்தம்பி
ஆட்டனத்தி
ஆடலரசன்(சு)
ஆடலிறைவன்
ஆடவல்லான்
ஆடற்செல்வன்
ஆடலழகன்
ஆண்டி
ஆண்டியப்பன்
ஆதன்
ஆதப்பன்
ஆதவன்
ஆத்திசூடி
ஆத்தியப்பன்
ஆதித்தன்
ஆதிபகவன்
ஆதிவாயில்
ஆயர்கோ
ஆயரண்ணல்
ஆராவமுதன்
ஆரூரன்
ஆலமர்செல்வன்
ஆலவாயண்ணல்
ஆலாலன்
ஆலிறைவன்
ஆலிலைச்செல்வன்
ஆவுடையப்பன்
ஆழி–முத்து
ஆழிமழைக்கண்ணன்
ஆழியண்ணல்
ஆளவந்தான்(ர்)
ஆளுடையநம்பி
ஆறுமுகம்(ன்)
ஆறுமுகவேலன்
ஆறிறைவன்

இ

இசைச்செல்வன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண் குழந்தைப் பெயர்கள்

அ

அகரம்
அகல்விழி
அகல்விளக்கு
அகநகை
அகமுடைநங்கை
அகவழகி
அங்கயற்கண்ணி
அஞ்சலம்
அஞ்சலை–யம்மா–ள்
அடிசிற்கினியாள்
அணி–கலம்–சடை
அணிமாலை–வளை–யிழை
அம்மங்கை
அம்மணி
அம்மாக்கண்ணு
அம்மாக்குட்டி
அமிழ்தம்
அமிழ்தமொழி
அமிழ்தரசி
அமிழ்திறைவி
அமிழ்தவல்லி
அமுதம்
அமுதவல்லி
அமுதசுரபி
அமுதவாணி
அமைதி
அமைதோளி
அரங்கநாயகி
அரசி
அரசநாயகி
அரசர்க்கரசி
அரசிறைவி
அரிவை
அரியநாயகி
அருட்செல்வி
அருண்மொழி
அருண்மொழியாள்
அருண்மொழித்தேவி
அருளரசி
அருளம்மை
அருளம்மா
அருளம்மாள்
அருள்–விழி–மங்கை
அருள்மணி–நங்கை–நெறி
அருள்வடிவு
அருளழகி
அருளாழி
அருளி
அருட்செல்வி(வம்)
அருட்குவை
அருவி
அருமைச்செல்வி
அருமையரசி
அல்லி
அல்லியரசி
அல்லிக்கொடி
அல்லிவிழி
அலர்மேல்மங்கை
அலர்மேலு
அலைவாய்மொழி
அலைகடல்
அழகி
அழகரசி
அழகம்மை–மா–மாள்
அழகுடைச்செல்வி
அழகுடைநங்கை
அழகுமுத்து
அழகோவியம்
அழகுநங்கை
அறச்செல்வி
அறப்பாவை
அறம்வளர்த்தநாயகி
அறவல்லி
அறிவுச்செல்வி
அறிவுடைநங்கை
அறிவழகி
அறிவுடையரசி
அறிவுக்கொடி
அறிவொளி
அன்பரசி
அன்பழகி
அன்புக்கொடி
அன்புச்செல்வி
அன்புரு
அன்புமணி
அன்புமொழி
அன்னம்
அன்னம்மா–ள்
அன்னம்மாள்
அன்னக்கிளி
அன்னக்கொடி
அனிச்சம்
அனிச்சவடி

ஆ

ஆசைமொழி
ஆடலரசி
ஆடலிறைவி
ஆடவல்லாள்
ஆடற்செல்வி
ஆடலழகி
ஆண்டாள்
ஆதி
ஆதிமந்தி
ஆதிரை
ஆம்பல்
ஆய்வளை
ஆயிழை
ஆவுடை
ஆவுடைநாயகி
ஆவுடைநங்கை
ஆவுடையம்மா–ள்
ஆராவமிழ்தம்
ஆராவமுதம்
ஆராவமுது
ஆலி
ஆழிமழை
ஆறுமுகத்தாய்

இ

இசைச்செல்வி
இசையமுது
இசையரசி
இடையழகி
இலங்கிழை
இந்திரவரசி
இந்திரதேவி
இயலரசி
இயற்கை–யரசி–அழகி
இலக்கணி
இளங்கண்ணி–கன்னி
இளங்கிளி–குமரி–குமில்
இளஞ்சித்திரை–செல்வி
இளஞ்சேய்
இளம்பிறை–க்கண்ணி
இளமதி
இளநிலா
இளந்தத்தை
இளந்தென்றல்
இளந்தேவி
இளவரசி
இளவழகி
இளவெயினி
இளநகை
இளநங்கை
இளமங்கை
இளயநாச்சியார்
இறைவி
இறையெழிலி
இறையரசி
இறைமுதல்வி
இறைநங்கை
இன்பக்குரல்
இன்பக்கிளி
இன்பவல்லி
இன்புரு
இன்மொழி–யாள்
இன்முல்லை

ஈ

ஈகவரசி
ஈகையரசி
ஈதலரசி
ஈரேழ்பாலை
ஈழச்செல்வி
ஈழமின்னல்

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழா! நீ பேசுவது தமிழா...?

உணர்ச்சிப்பாவலர் காசி ஆனந்தன்

தமிழா! - நீ
பேசுவது தமிழா...?

அன்னையைத் தமிழ்வாயால்
"மம்மி" என்றழைத்தாய்...
அழகுக் குழந்தையை
"பேபி" என்றழைத்தாய்...
என்னடா தந்தையை
"டாடி" என்றழைத்தாய்...
இன்னுயிர்த் தமிழை
கொன்று தொலைத்தாய்....
தமிழா! - நீ

உறவை "லவ்" என்றாய்
உதவாத சேர்க்கை...
"ஒய்ப்" என்றாய் மனைவியை
பார் உன்றன் போக்கை...
இரவை "நைட்" என்றாய்
விடியாதுன் வாழ்க்கை...
இனிப்பை "ஸ்வீட்" என்றாய்
அறுத்தெறி நாக்கை...
தமிழா! - நீ

வண்டிக்காரன் கேட்டான்
"லெப்ட்டா? ரைட்டா?"
வழக்கறிஞன் கேட்டான்
என்ன தம்பி "பைட்டா?"
துண்டுக்காரன் கேட்டான்
கூட்டம் "லேட்டா?"
தொலையாதா தமிழ்
இப்படிக் கேட்டா?
தமிழா! - நீ

கொண்ட நண்பனை
"பிரண்டு" என்பதா?
கோலத் தமிழ்மொழியை
ஆங்கிலம் தின்பதா?
கண்டவனை எல்லாம்
"சார்" என்று சொல்வதா?
கண்முன் உன் தாய்மொழி
சாவது நல்லதா?
தமிழா! - நீ

பாட்டன் கையில
"வாக்கிங் ஸ்டிக்கா"
பாட்டி உதட்டுல
என்ன "லிப்ஸ்டிக்கா?
வீட்டில பெண்ணின்
தலையில் "ரிப்பனா?"
வெள்ளைக் காரன்தான்
நமக்கு அப்பனா?
தமிழா! - நீ

நிம்மதி இல்லையடா!

கவிஞர் தே.சனார்த்தனன்

அன்பில்லா ஊரினிலே
அரசமரம் போலிருந்தேன்!
பண்பில்லா ஊரினிலே
பனைமரம்போல் நானிருந்தேன்

மனமில்லா ஊரினிலே
மாமரம்போல் நான்திகழ்ந்தேன்!
குணமில்லா ஊரினிலே
கொய்யாவைப் போல்நிறைந்தேன்

பொருளில்லா ஊரினிலே
புளியமரம் போல்செழித்தேன்!
அருளில்லா ஊரினிலே
ஆலமரம் போல்தழைத்தேன்!

வாழ்வில்லா ஊரினிலே
வாழைமரம் போல்வளர்ந்தேன்!
தாழ்வுள்ள ஊரினிலே
தங்குதென்னை போல்உயர்ந்தேன்

பயமுள்ள ஊரினிலே
பலாவைப்போல் நான்வளர்ந்தேன்!
தயவில்லா ஊரினிலே
தரித்திரனாய் ஏன்பிறந்தேன்?

நீதியில்லா ஊரினிலே
நிம்மதியும் இல்லையடா...
சாதியுள்ள ஊரினிலே
சண்டைகளே உள்ளதடா...

சூது உள்ள உலகமடா...
சூழ்ச்சியுள்ள உலகமடா...
ஏதுமில்லா ஏழைகளை
ஏத்திவிளை யாடுமடா...

பொய்,களவு பெருகுதடா
புன்நெறிகள் பரவுதடா...
மெய்யறிவு சொல்பவரை
வீழ்த்திடவே எண்ணுதடா...

இமையற்ற கண்களைப்போல்
இத்தரையில் நான்பிறந்தேன்!
சுமையற்ற நல்வாழ்வைச்
சூடிநலம் காண்பேனா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாட்டு இயற்றப் பயில்வோம் – 2

முனைவர் இரா. திருமுருகனார்

3. அசை

எழுத்தை அசைத்து உண்டாக்குவது அசை. ஓர் அசைக்குள் எத்தனை எழுத்துகள் இருக்கும்? நாம் முன்பு பார்த்த ஆறெலாம் என்ற பாடலில் உள்ள,

குதிக்–கும், சே–றெலாம், செங்–கோல், வீ–தி, தமிழெலாம் என்னும் சீர்களின் அசைகளைப் பிரித்துப் பார்க்கலாம். சிறுகோடு இட்டுப் பிரிக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றும் ஓர் அசை.

தி – ஒரு குறில் மட்டும் ஓர் அசையாக உள்ளது,

வீ – ஒரு நெடில் மட்டும் ஓர் அசையாக உள்ளது,

தமி –இரு குறில் இணைந்து ஓர் அசையாக உள்ளது,

றெலா –ஒரு குறிலும் ஒரு நெடிலும் இணைந்து ஓர் அசையாக உள்ளது,

முன்னிரண்டு அசைகளில் ஒருயிரே உள்ளது. அவற்றை ஓர் உயிர் அசை எனலாம். பின்னிரண்டு அசைகளில் இரண்டு உயிர்கள் உள்ளன, அவற்றை ஈருயிர் அசை எனலாம்.

கும் என்று குறில் தன்னை அடுத்து ஒற்றைப் பெற்று வந்தாலும் அந்த அசையில் இருப்பது ஓர் உயிர்தான் எனவே அது ஒருயிர் அசைதான். அதுபோல் கோல் ஓர் உயிர் அசையே. கொழிக் என்பதும், றெலாம் என்பதும் ஒற்றடுத்து வந்துள்ளன எனினும் அவையும் ஈருயிர் அசைகளே. இவற்றை,

தி – தனிக்குறில்
வீ – தனிநெடில்
கும் – குறில்ஒற்று
கோல்– நெடில்ஒற்று
ஓர் உயிர் அசைகள்

தமி – குறில் இணை
றெலா – குறில் நெடில்
கொழிக்– குறில் இணை ஒற்று
றெலாம்– குறில் நெடில் ஒற்று
ஈருயிர் அசைகள்

என வகைப்படுத்தலாம்.

நேர் என்ற சொல்லை ஓர் அசையாகக் கொண்டால் இந்த இருவகையில் எதில் சேரும். அதனால் ஒருயிர் அசைகள் நான்கையும் (நேர் என்ற சொல்லைப் போன்ற அசை என்ற பொருளில்) இனிச் சுருக்கமாக "நேரசை" என்று அழைப்போம்.

நிரை என்ற சொல் ஈரசை என்றால் அது ஈருயிர் அசையில் சேரும். அதனால் ஈருயிர் அசைகள் நான்கையும் (நிரை என்ற சொல்லைப் போன்ற அசை என்ற பொருளில்) இனிச் சுருக்கமாக "நிரையசை" என்று அழைப்போம்.

இதிலிருந்து அசைகள் எட்டு வகையாகப் பிறக்கும் என்றும், அவற்றுள் நேரசை நான்கு என்றும், நிரையசை நான்கு என்றும் அறிந்து கொண்டோம்.

பயிற்சி

1. யாப்பிலக்கணத்தில் எழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

2. நேரசையில் எத்தனை உயிர்கள் இருக்கும்? நிரையசையில் எத்தனை உயிர்கள் இருக்கும்?

3. நேரசை எத்தனை வகையாகப் பிறக்கும்? அவை யாவை?

4. நிரையசை எத்தனை வகையாகப் பிறக்கும்? அவை யாவை?

5. பின் வருவன எப்படி அமைந்த என்ன அசைகள்?

கனா, கூன், வரால், நில் நீ, பணம், பாய், புறா, நாள், பல, வளார், து

(எ . காட்டு: கனா – குறில் நெடில் – நிரையசை)

6. குறில்ஒற்று, குறிலிணை, குறில்நெடில், குறிலிணை ஒற்று என அமைந்த அசைகளுக்கு ஒவ்வோர் எடுத்துக் காட்டுத் தருக.

(இளங்கவிஞர்களும் கவிதை எழுத ஆசை படுபவர்களும் இப்பகுதியைப் பலமுறை படித்து உணர்ந்தால் மரபுப் பாக்கள் எழுதும் திறனைப் பெறுவார்)

எங்கள் வாழ்வு எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னவளே!

நான் மரக்கட்டைதான்
உன் நினைவுகள்
என்னைத் தீண்டாதவரை!

என்னுயிரே! – நீ
தீப்பெட்டி என்றால் – நான்
தீக்குச்சியாகவும் தயார்!
உன்னை உரசும்
பாக்கியமாவது
கிடைத்திடுமே!

நேரிழையே! – நீ
வெற்றிலை போட்டால் – நான்
குப்பைத் தொட்டியாகவும்
தயார்!
உன் உமிழ் நீர்
என் மேல் படுமல்லவா!

ஆருயிரே!
காது குத்தினால்
காதுக்கு அழகு!
மூக்கு குத்தினால்
முகத்திற்கு அழகு!
காதலித்தபின் இதயத்தில்
குத்துவதுதான் – உன்
உள்ளத்துக்கு அழகோ?

என்னன்பே!
என் இமைகளுக்கு
என்ன இலஞ்சம் தந்தாய்!
உன்னைப் பார்க்காதவரை
மூட மறுக்கிறதே!

என்னவளே!
அமாவாசையன்று – நீ
வெளியேவரவேண்டாம்!–அன்று
இருட்டாகவே
இருந்துவிட்டுப் போகட்டும்!

இளையவளே!
அடுத்த பிறவியில் – நீ
வசிக்குமிடத்தின்
சாலையாக – நான்
பிறக்க வேண்டுகிறேன்!
உன் பாதங்கள்
என்மேல் படுமல்லவா!

இளங்கொடியே!
நான் ஒரு கசினிதான் – நீ
என்னை வெறுத்தும்
இன்னமும் முயல்கிறேன்
உன் காதலைப் பெற!

கயல்விழியே!
காதல் குளத்தில் – என்
இதயப் பந்து மிதக்கிறது!
அதை எடுத்தணைப்பாயோ?
குத்தி மூழ்க வைப்பாயோ?
காத்திருக்கிறேன்!

–பாரீஸ் பார்த்தசாரதி

கம்பனின் கை வண்ணம்

சு. முத்துக்குமரன்

துணைத்தலைவர்: பிரான்சு சிவன் கோயில்

கம்பராமாயணத்தில் தொடக்கம் முதல் இறுதி வரை உள்ள பாடல்கள் அனைத்தும் தேன் கலந்த முக்கனிச் சாறாகும். படிப்பவர் நெஞ்சைக் கவர்ந்திழுக்கும் காந்த விசை கொண்ட கவிகளாகும். விசுவாமித்திர முனிவர் இராமனையும், இலக்குவனையும் அழைத்துக் கொண்டு மிதிலைக்குச் செல்கிறார். மிதிலை மன்னன் சனகன் தன் மகள் சீதைக்கு நடத்தும் சுயவரப் போட்டியில் இராமனை வெற்றி பெறச்செய்து, இராமன் சீதை திருமணத்தை நடத்த எண்ணுகிறார்.

விசுவாமித்திர முனிவர், இராமன், இலக்குவன் ஆகிய மூவரும் மிதிலை அரண்மனை வழியாகச் செல்லும் பொழுது, கன்னிமாடத்தில் நின்ற சீதை இராமனைப் பார்க்கிறாள். இராமன் சீதையைப் பார்க்கிறான். இக்காட்சியைக் கம்பன் கவிநலம் பொங்க, தமிழ் நலம் ஓங்கப் படைத்திருக்கின்றான்.

எண்ண அரு நலத்தினாள் இளையள் நின்றுழி
கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று
உண்ணவும், நிலைபெறாது உணர்வும் ஒன்றிட,
அண்ணலும் நோக்கினான்: அவளும் நோக்கினாள்
கம்ப, பாலகாண்டம் – 514

"கண்ணொடு கண் இணை கவ்வி", என்ற அடியைப் படிக்கும் பொழுதெல்லாம் காதல் சுவையை நம்முள்ளத்துக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கும். "அண்ணலும் நோக்கினான்: அவளும் நோக்கினாள்" என்ற அடி பாவலர்களின் இதயங்களில் பதிவு செய்யப்பட்ட அடியாகும்.

சீதை திருமணத்தை முன்னிட்டு நடத்தப்படும் போட்டியில் கலந்து கொள்ள வலிமையுடைய இளவரசர்கள் பலர் வந்திருந்தனர். அவர்களால் சிவதனுசுவை அசைக்கவே முடியவில்லை. விசுவாமித்திர முனிவரின் முக குறிப்பை அறிந்த இராமன் வில்லை நோக்கிச் சென்றான், இராமன் வில்லை எடுத்து நாண் தொடுக்க, வில் உடைந்த ஓசையை அனைவரும் கேட்ட, இக்காட்சியைக் கம்பன் கவிமழையாகப் பொழிகின்றான்

தடுத்து இமையாமல் இருந்தவர், தாளில்
மடுத்ததும், நாண் நுதி வைத்ததும், நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டனர்: இற்றது கேட்டார்.
கம்ப, பாலகாண்டம் – 699

வில்லை, இராமன் எடுத்ததை அனைவரும் கண்டனர் உடனே வில் உடைந்துவிழும் ஓசையை அனைவரும் கேட்டனர். மிக மிக விரைவாக இராமன் வில்லில் நாண் ஏற்றினான் என்று இராமனின் கை வண்ணத்தைக் கம்பன் கவி வண்ணத்தில் காட்டுகிறான்.

இச்செய்தி அயோத்திக்குத் தெரிவிக்கப்படுகிறது. அங்கிருந்து இராமனின் தந்தை, தாய் மற்றும் உறவினர்கள் மிதிலையை நோக்கி வருகின்றனர். தசரதனின் தேரில் பொன் தகடு பொருத்தப்பட்டு மிக அழகாக மிளிர்கிறது. இக்காட்சியைப் பொலிவோடு படைத்துள்ளான் கம்பன்

"தெருண்ட மேலவர், சிறியவர்ச் சேரினும், அவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவர்" எனும் இது வழக்கே:
உருண்ட வாய்தொறும், பொன் உருள் உரைத்து உரைத்து ஓடி
இருண்ட கல்லையும் தன் நிறம் ஆக்கிய இரதம்
கம்ப, பாலகாண்டம் – 820

தூய அடியார்கள் தம்பால் வருகின்ற தீயவர்களைத் நல்லவர்களாய் ஆக்குவதைப் போல், தசரதனுடைய தங்கக் கோடு மருவிய தேர்ச்சக்கரங்கள் உருண்டு செல்லும் பாதையில் உள்ள கற்பாறைகளைப் பொன் மயமாக ஒளிரச் செய்கிறது. சருக்கரைப் பாகாக இனிக்கும் கம்பனின் காவியத்தைச் சுவைப்போம்! நலம் படைப்போம்! ☐

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழும் சிலம்பும்

பு.மயூரன்

மொழி என்றால் என்ன? பலர் நினைப்பது போல் சொற்களின் கூட்டமோ அல்லது உணர்ச்சிகளை வெளிப்படுத்தப் பயன்படும் கருவியோ அல்ல மொழி. மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளம். ஒரு மொழியை அழிப்பது அந்த இனத்தையே அழிப்பதற்கு சமம். கிரேக்க மொழி அழிந்தது, அதன் இனம், நாகரீகம், பண்பாடு அத்தனையும் அழிந்தது. பண்டைய சுமேரிய மொழி அழிந்தது, அதன் இனம், பண்பாடு அத்தனையும் அழிந்தொழிந்தது. அந்த வகையில் பண்டைய மொழிகளில் தற்போது மிஞ்சி நிற்பது தமிழ் ஒன்றே, ஆனால் அன்று தொட்டு இன்று வரை தமிழ் மொழி கடந்து வந்துள்ள காட்டாறுகள் எண்ணிலடங்கா. தமிழுக்கு முதல் கேடு ஆரியர்களால் வந்தது.

தமிழகத்திற்கு வந்த ஆரியர்கள் வாளேந்தி வரவில்லை. ஏனெனில் தமிழர்களைப் போர்க்களத்தில் சந்திப்பது இயலாத காரியம், அதற்காக அவர்கள் கையில் எடுத்த ஆயுதம்தான் பார்பனியம். தங்களின் மதம், கடவுள், சாஸ்திரம் போன்றவற்றால் தமிழர்களை அடிமைப் படுத்தினார்கள். தங்களின் சமஸ்கிருதம் தேவமொழி என்றும் தமிழ் நீசமொழி என்றும் கற்பித்தனர். எண்ணற்ற வடமொழிச் சொற்கள் உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியோடு கலந்து விட்டன, தமிழின் தொன்மை மறைக்கப்பட்டன. தமிழின் தனித்தன்மை குலைக்கப்பட்டன.

ஆட்சிபொறுப்பை எற்ற காங்கிரச் கட்சி தமிழ் நாட்டில் இந்தியைப் பலவந்தமாகத் திணித்தது. அப்போது அறிஞர் அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகம் களம் அமைத்துத் தமிழுக்காகப் போராடியது, அதில் பலர் தங்கள் இன்னுயிரை நீத்தார்கள். அறிஞர் அண்ணாவின் அயராத முயற்சியால் இந்தி ஆதிக்கம் நீக்கப்பட்டது. சமஸ்கிருதத்தைக் கட்டுப்படுத்தி இந்தி ஆதிக்கத்தை ஒழித்துத் தமிழன் நிம்மதியாகத் தலை நிமிர்ந்தபோது, ஆதிக்க சக்தியாக ஆங்கிலம் தமிழைக் குலைக்கத் தொடங்கியது.

தமிழர்களின் பொற்காலம் என்று போற்றப்படும் சங்க காலத்தில் தமிழர்கள் மிகச் சிறந்து விளங்கினார்கள். அதிலும் பாண்டிய மன்னர்கள் சங்கம் வைத்துத் தமிழை வளர்த்தார்கள். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் அங்கே அரங்கேறின. தமிழர்களின் புகழ் திக்கெட்டிலும் பரவிக்கிடந்தன.

பண்டைய மக்கள் விலங்குகளாகத் திரிந்த அந்தக் காலத்திலேயே பண்பாட்டையும் நாகரீகத்தையும் உலகிற்குக் கற்றுக் கொடுத்த தமிழினம் அயலினத்தவர் வருகையால் சாதி மதச் சேற்றுக்குள் சிக்கித் துடித்தப் போதும், மொழி அடையாளத்தைத் துறக்க முற்பட்ட போது, தமிழரை மீட்டெடுக்க வழி செய்தவர்தான் சிலப்பதிகாரம் எனும்தமிழரின் தனிப்பெருஞ்செல்வத்தைப் படைத்த இளங்கோ அடிகள்.

சிலம்பு தமிழரின் பெருமையைத் தரணியெங்கும் பறைசாற்றும் நற்றமிழ் இலக்கியம். நிலவுடைமைச் சமுதாயத்தை இடித்துத் தள்ளி அடுத்த கட்டமான வணிகச் சமுதாயத்தின் பிறப்பின் பெருமையை பாடியது. முத்தமிழ் எழிலும், கலைகளின் மேன்மையும், அரசியல் அறமும், தமிழரின் வாழ்வியல் நெறிகளும், குரவைகளின் ஒலிகளும் சிலம்பில் தன்னிகரற்று விளங்குகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக மூவேந்தரின் குறிப்புகள் நமக்குக் கிடைக்கின்றன.

சிலப்பதிகார நாயகி கண்ணகி சோழ நாட்டின் தலைநகரான புகாரில் பிறக்கின்றாள், அப்போது இளங்கோ சோழனின் மனவளத்தைக் குறிப்பிடுகிறார், அடுத்துக் கண்ணகி பாண்டிய நாட்டின் தலைநகரான மதுரையில் சிறப்படைகிறாள். அப்போது "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்று ஆவதும்" என்பது போல் தான் தவறாகத் தீர்ப்பு வழங்கிவிட்டேன் என்று அறிந்த அக்கணமே உயிர் விடுகிறான் பாண்டியன் நெடுஞ்செழியன் அந்தவிடத்தில் பாண்டியனின் நேர்மையைக் குறிப்பிடுகிறார். இறுதியாகக் கண்ணகி சேர நாட்டின் தலைநகரான வாஞ்சியில் தெய்வமாகிறாள் அப்போது அந்நாட்டின் அரசன் சேரன் செங்குட்டுவன் தன் நாட்டில் தெய்வமான கண்ணகிக்குச் சிலையெடுக்கத் தீர்மானிக்கின்றான். அந்நேரத்தில் வடநாட்டு மன்னர்களில் புகழ்பெற்றிருந்த கனகன், விசயன் எனும் மன்னர்கள் தமிழையும் தமிழர்களையும் பழித்ததைக் கேள்வியுறுகிறான், உடனே தமிழைப் பழித்த தருக்கர்களைப் படைகொண்டு அடக்கி, இமயத்திலிருந்து கல் எடுத்து, அதை இவ்விருவரின் தலைகளின்மேல் சுமக்கவைத்துத் தன் நாட்டிற்குக் கொண்டுவந்து கற்புக்கரசி கண்ணகிக்குச் சிலையெடுத்தான், இந்தவிடத்தில் சேரனின் வீரத்தை இளங்கோ குறிப்பிடுகிறார்,

சோழனின் மனவளத்தையும், பாண்டியனின் நேர்மையையும், சேரனின் வீரத்தையும் ஒருங்கே கூறி, சேர சோழ பாண்டியர் எனப் பிரிந்திருந்த தமிழ்நாட்டை ஒன்றுபடுத்தித் தமிழர்களுக்கிடையே ஒரு தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்கிய அருந்தமிழ் இலக்கியம்தான் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரத்தில் பகுத்தறிவிற்குப் புறம்பான செய்திகள் அங்காங்கே சில இருக்கின்றன இருந்தபோதிலும் சிலம்பில் ஒலிக்கும் செந்தமிழ்ப் பண்பு அவற்றை முழுமையாக மறைத்து விடுகின்றது.

முதல் கவிதை இதழ்

உலகிலேயே முதன் முதலில் கவிதையிலேயே வார இதழை நடத்தியவர் கவிஞர் சுரதா. அந்த இதழின் பெயர் "காவியம்" 1954 ல் வெளிவந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கம்பன் பாடிய வண்ணங்கள்

3. கம்பனின் ஆசிரிய விருத்தங்கள்

முனைவர் இரா.திருமுருகனார்

7. அறுசீர்ச் சந்த விருத்தம் – 1

கம்பன் பாடல்களில் சந்தப் பாடல்களும் உண்டு, சந்தம் அற்ற பாடல்களும் உண்டு, அறுசீர் விருத்தங்களில் இதுவரையில் நாம் பார்த்தவை சந்தமற்றவை. இனிச் சந்தமுடைய அறுசீர் விருத்தங்களைப் பார்க்கலாம்.

சந்தப் பாடல்களைப் பார்க்கும் முன், அவை பற்றிய சில அடிப்படை விதிகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். சந்தப் பாக்களைத் தேமா புளிமா முதலிய வாய்பாடுகளை மட்டும் கொண்டு விளக்க முடியாது. அவற்றின் சீர்களுக்கு மாத்திரை அளவு உண்டு. அதையும் கொண்டுதான் அவற்றின் சீர்களை விளக்கிக் கொள்ள முடியும்.

எழுத்திலக்கணத்தில் கூறப்படும் மாத்திரை அளவுகள் சந்தப்பா இலக்கணத்துக்கு முழுமையும் பொருந்தாது. இதற்கென்று தனி அளவு முறை உண்டு. அது வருமாறு.

1. குறில் ஒரு மாத்திரை: க
2. நெடில் இரண்டு மாத்திரை: கா
3. குறில் ஒற்று அடுத்தது இரண்டு மாத்திரை: கண்
4. நெடில் ஒற்று அடுத்தது இரண்டுமாத்திரை, காண்

சுருக்கமாகச் சொன்னால் குறில் மட்டும் ஒரு மாத்திரை. மற்றவை யாவும் இரண்டு மாத்திரை.

ஒரே மாத்திரை அளவு உடைய சீர் தேமாவாகவும் இருக்கலாம் புளிமாவாகவும் இருக்கலாம். யாப்பிலக்கணப் படி "போக" – தேமா, "வருக" – புளிமா. ஆகையால் வெவ்வேறு வகையான சீர்கள். ஆனால் சந்த இலக்கணப் படி "போக" – 3 மாத்திரைகள், "வருக" – 3 மாத்திரைகள், ஆகையால் ஒரே வகையான சீர்கள்.

யாப்பிலக்கணத்தில் தேமாவாக வரும் சீர்கள் சந்த இலக்கணத்தில் "போக" என்று 3 மாத்திரையும் பெறும், "போந்தான்" என்று 4 மாத்திரையும் பெறும்,

எனவே, இத்தகைய மாத்திரை அளவு முறையில் சந்தப் பாடல்களை இனங் காண வேண்டும். மேலும் தெரிந்து கொள்ள வேண்டிய சில விதிகள் வருமாறு:

ஓர் அடியில் இறுதியிலோ, சமமாய் வரும் அரையடியின் இறுதியிலோ வரும் குறில்கள், இரண்டு மாத்திரை பெறும்.

சீர்களின் இடையில் வரும் ய ர ல ழ ள ஒற்றுக்களும் சிறுபான்மை ன ண ம மெய்களும் சிலவிடங்களில் மாத்திரை கணக்கிடப் பெறா.

இறுதி இரண்டு விதிகளுக்கும் பின் வரும் பாடல்களில் காட்டுக் காணலாம்.

இவ் விலக்கணங்களைக் கூறும் விருத்தப் பாவியல் நூற்பாக்கள் வருமாறு:

குற்றுயிர் தனக்கும்இரு மாத்திரை குறித்தார்
ஒற்றதை அடுத்துறையின், ஒன்றுதனி நிற்பின்
மற்றஉயிர் மாத்திரை இரண்டென வகுத்தார்
ஒற்றதை அடுப்பினும் உணர்ந்தறிய வல்லார்
(விருத்தப்பாவியல், 6ஆம் படலம் –2)

அந்தத்து உறைகுன்றிய அக்கரமே
சந்தத்தினில் நீடு உயிராம், சமமாய்
வந்து உற்றிடு சீர்கடை அவ்வழியாம்
செந்தா மரைசேர் திருவாள் நுதலே
(விருத்தப்பாவியல், 6ஆம் படலம் –4)

இனிக் கம்பனுடைய அறுசீர்ச் சந்த விருத்தங்களில் ஒரு வகையினை ஆராய்வோம்.

வீடண னமலனை விற(ல்)கெழுபோர்
விடலையை இனிஇடை விடலுளதேல்
சூடலை துறுமலர் வாகையெனத்
தொழுதன னவளவி லழகனுமக்
கோடணை வரிசிலை உலகுலையக்
குலவிரை பிதிர்பட நிலவரையிற்
சேடனும் வெருவுற உருமுறழ்திண்
தெறுகணை முறைமுறை சிதறினனால்
(யுத்த, இந்திரசித்துவதை. 21)

இப்பாடலைச் சீர் வாய்பாடுகளில் எழுதினால்

கூவிளம் கருவிளம் கருவிளங்காய் என்ற அமைப்பே எல்லா அரையடிகளிலும் கிடைக்கும். ஆனால் இரண்டாம் அடியில் மட்டும் "வாகையென" என்று கூவிளங்காய் ஒன்று உள்ளது அடியின் முதலில் கூவிளம் வரும் இடத்தில் இத்தகைய வேறு பாடல்களில் கருவிளமும் வருகின்றது. இவற்றை மனத்தில் கொண்டு இதன் அமைப்பை

விளம் கருவிளம் விளங்காய்

என்று சொல்லலாம் ஆனால் மாத்திரைக் கணக்கில் எல்லா விளசீர்களும் ஒன்றாய் இருப்பதில்லை. "தொழுதன" என்பது 4 மாத்திரை ஆனால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கொடுத்தனன்" என்பது 6 மாத்திரை. இதுபோல் எல்லா விளங்காய்ச் சீர்களும் மாத்திரை அளவில் சமமாய் இருப்பதில்லை. எனவே சந்தப்பாவுக்கே உரிய தனிப்பட்ட முறையில், இப்பாடலில் முதற்சீர் 4மாத்திரையுள்ள விளமாகவும் இரண்டாம் சீர் 4 மாத்திரையுள்ள கருவிளமாகவும் மூன்றாம் சீர் 6 மாத்திரையுள்ள விளங்காய் ஆகவும் வருகின்றன எனலாம். ஒவ்வோர் அரையடியும் இப்படியே வரும். அல்லது அரையடியில்,

"தானன தனதன தனதனனா"

என்று வரும் சந்தக் குறிப்பு வாய்பாட்டாலும் விளக்கலாம். ஆனால் தானன என்ற இடத்தில் தந்தன, தனதன இரண்டும் வரலாம் தனதனனா என்ற இடத்தில் தானதனா என்றும் வரலாம். எந்த முறையில் சொன்னாலும் மாத்திரை அளவு சரியாக வரவேண்டும்.

மேல் உள்ள பாடலில் முதல் இருசீர்களில் 4 மாத்திரைகளும் மூன்றாம் சீர்களில் 6 மாத்திரைகளும் வருவதை எண்ணி உணர்க. மாத்திரை கணக்கிடும் போது சீர்ன் இடையிலும் இறுதியிலும் வரும் ஐகாரங்களைக் குறிலாகக் கொள்ள வேண்டும்.

"விறல்கெழுபோர்" என்பதில் மேற்சொன்ன 6ஆம் விதிப்படி லகரம் மாத்திரை பெறவில்லை.

இதில் மோனை 1, 4 ஆம் சீர்களில் வரும். இத்தகைய சந்தப் பாடல்கள் சம்பந்தர் தேவாரத்தில் காணப்படுகின்றன. கம்பராமாயணத்தில் ஓர் இடத்தில் மட்டும் பத்துப் பாடல்கள் உள்ளன. – தொடரும்

செய்தி மேடை

☐ பிரான்சு தமிழ்ச் சங்கம் 12–5–2001 அன்று பா . தசரதன் தலைமையில் நூல் வெளியிட்டு விழாவை நடத்தியது. பாரீச் பார்த்தசாரதி எழுதிய "கவிதைக்கு என்ன வேலி " என்ற நூலுக்குக் கவிஞர் கி . பாரதிதாசன் ஆய்வுரை வழங்கினார். பாரீச் ஜமால் எழுதிய "வாழ வகை சொல்லும் வழிகாட்டிகள்" என்ற நூலுக்குப் பேராசிரியர் முடியப்பநாதன் ஆய்வுரை வழங்கினார். பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு அறிமுக விழா நடைபெற்றது. அறிமுகவுரை ச . சச்சிதானந்தம் வழங்கினார். தஞ்சைப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் சுப்புராயலும், ஈழநாடு, தமிழாலயம் நிறுவனர் சி . பாலச்சந்திரனும் சிறப்புரை வழங்கினார்கள் வரதராசு நன்றியுரை கூறினார்

☐ கிரிஞ் பிரெஞ்சு இந்தியச் சமூகப் பண்பாட்டுக் கழகம் 27–5–2001 அன்று தமிழ்ப் புத்தாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. 13–5–2001 அன்று கோலப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் கொடுத்தது. மாலை 4 மணிக்கு "இன்றைய மனித வளர்ச்சிக்குத் தேவையானது ஆன்மீகமா? அறிவியலா? என்ற தலைப்பில் பேராசிரியர் முடியப்பநாதன் தலைமையில் பட்டி மன்றம் நடைபெற்றது. அறிவியலே என்ற அணியில் பேராசிரியர் சக்திப்புயல், கவிஞர் பாரீச் பார்த்தசாரதி, சான், திருமதி வேணுகோபால், தில்லைக்கோவிந்தன், ஆனந்தன், செவ்வி வினோலா ஆகியோரும் ஆன்மீகமே என்ற தலைப்பில் பாலகிருட்டினன், கவிஞர் கி . பாரதிதாசன், முத்துக்குமரன், பாண்டுரங்கன், அடியார்க்குன்பன் கோவிந்தசாமி செயராமன், கலியப்பெருமாள், தியாகராசன் ஆகியோர் பேசினார்கள்.

☐ குவைத் நாட்டிலிருந்து வருகை தந்த கவிஞர் திலகம் சேது அவர்களுக்குப் பிரான்சு தமிழ்ச் சங்கம் 17–5–2001 அன்று பாராட்டு விழா நடத்தியது. விழாவிற்குப் பா . தசரதன் தலைமை தாங்கினார். பாரீச் ஜமால், கவிஞர் பாரீச் பார்த்தசாரதி, கவிஞர் கி . பாரதிதாசன் உரையாற்றினார்கள். கவிஞர் திலகம் சேது சிறப்புரை ஆற்றினார். நா . கலியப்பெருமாள் நன்றியுரை கூறினார்.

☐ பிரான்சு சிவன் கோயிலில் 20–05–2001 அன்று மாத வழிபாடு நடைபெற்றது. இவ்வழி பாட்டைத் திரு திருமதி சத்தியானந்தம், திரு திருமதி சீதர் ஆகியோர் ஏற்று நடத்தினார்கள். சிவன் கோயில் தலைவர் அருட்செல்வர் சுகுமாறன் முருகையனார் வரவேற்புரை ஆற்றினார். செ . பாலகிருட்டினன், முத்துக்குமரன் கவிஞர் கி . பாரதிதாசன் ஆகியோர் சொற்பொழிவு யாற்றினார்கள். மேலும் செய்திகளுக்குத் தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள் : 01 64 41 84 45 , 01 64 41 91 29 .

☐ அடியார்க்கு அன்பன் கோவிந்தசாமி செயராமன் அமைத்து இயக்கி வரும் முத்தமிழ்ச்சங்கம், தமிழ்வாணி முத்திங்களிதழ் 27–05–2001 அன்று "மகாகவி பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில் தருமன் குற்றவாளி" என்ற தலைப்பில் வழக்காடு மன்றம் நடத்தியது. பேராசிரியர் சக்திப்புயல் நடுவராகப் பொறுப்பேற்று விழாவைச் சிறப்புடன் நடத்தித் தந்தார். நா . கலியப்பெருமாள், மோரோ நடராசன் வழக்கைத் தொடுத்தனர். கவிஞர் கி . பாரதிதாசன், அடியார்க்குன்பன் கோவிந்தசாமி செயராமன் வழக்கை மறுத்தனர். செல்வி இராகுலராசா லிண்டாலீ, செல்வி இராகுலராசா லட்சா ஆகியோர் நாட்டிய விருந்தளித்தனர்

☐ 27–05–2001 அன்று கிரிஞ் நகரில் கதிர்வேல் சிதம்பரநாதன்–விசயலட்சுமி இணையரின் மகன் செல்வன் கதிர்வேல் பாலமுருகன், கணபதி– செயலட்சுமி இணையரின் மகள் செல்வி கணபதி ரேணுகா தேவி ஆகிய இருவருக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் எல்லா நலமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

☐ பிரான்சு நற்குரு இராகவேந்திரா சங்கம் இன்னிசை வகுப்பை நடத்தி வருகிறது. கற்றுக் கொள்ள விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி எண் : 01 34 53 82 46 .

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கம்பனில் – இளையவர்

பாவலர்மணி சித்தன்

கம்பனிலே இளையவர்தம் பெருமைக்கா பஞ்சம்?
கண்பட்ட இடமெல்லாம் அவர்புகழே மிஞ்சும்!
தம்பெரிய காப்பியத்தில் கவி கம்ப நாடன்
தமையன் இராமனுக்கிளையோர் மூவர்எனச் சொன்னான்
தம்பியர்கள் மூவர் பரதன் இலக்குவன் நற்
சத்ருக்கன் என்போர் – தன்னலஞ்சிறிதி லாதோர்
அம்புவிக்கோர் பேரரசன் – தசரதனின் மைந்த
ராய்இவர்கள் அவதரித்தார் – அகிலமெலாம் போற்ற!

தந்தை வானகம்புகுந்தார்! தனயன்கான் சென்றான்!
தத்தளித்தார் நாட்டுமக்கள்! ஆள்வதற்கு யாரும்
முந்திவந்தா ரல்லர் – நாற்காலிக்குச் சண்டை
முன்னாளில் நடந்ததில்லை! தேர்தலிலே நிற்க
விந்தையொடும் ஆயிரம்பேர் ஒருதொகுதிக் காக
விண்ணப்பம் தரவில்லை! நல்லாட்சி காண
எந்தை இராமன் வரட்டும் என்றிருந்தார் இளையவர்!
இன்றைக்கும் அன்றைக்கும் ஏணிவைக்க வேண்டும்!

ஆட்சியினைப் பிடிப்பதற்கே அலையுமிந்த உலகில்
அண்ணனையே தம்பி எதிர்த்து அரசியலில் நிற்பான்!
தாழ்ச்சியினை மதியாது – கணவனையே எதிர்த்துச்
சட்டசபை தேர்தலுக்கு நிற்பாளோர் மனைவி!
சூழ்ச்சிசெய்து – தந்தையையே வீழ்த்தி, அரசாளத்
துடிதுடித்துப் போர்க்கோலம் புனைகின்றான் மைந்தன்!
வீழ்ச்சியுறச் செய்தே, தன் மாமனார் மீது
வீரவாள் வீசுகின்ற மருமகன்மார் தம்மை

மண்ணிதனில் காண்கின்றோம்! காடாள ராமன்
மனமுவந்து சென்றதன்பின் – அயோத்தியினை ஆளும்
எண்ணம், எவர்க்குமில்லை! தேர்தல் வைக்கவில்லை!
எவர்க்கு ஆட்சி எனக்கருத்துக் கணிப்புகள் இல்லை!
கண்ணியமிலாமல் பல விளம்பரங்கள் செய்து
கையூட்டு ஈந்தே – வாக்குதனைக் கேட்டார் இலரே!
விண்ணேகினோர், எல்லாம் வாக்களிக்க வருமோர்
விந்தைகளும் நடக்கவில்லை! இராமபிரான் என்னும்,

அண்ணாவின் தம்பியர்,தம் பெருமையினை மறந்தே
ஆட்சியினைப் பிடிப்பதற்குத் துணைதேட வில்லை!
மண்ணாளும் நேர்மையுளார் தமைக்கான ஆதி
சேசனன்று வில்லெடுத்தான்! இலக்குவனைச்சொன்னேன்!
கண்ணாளன் இராமனது இராச்சியத்தைக் காணக்
கைகட்டிக் காத்திருந்தார் – அன்றிருந்த இளையோர்!
உண்ணாமல் உறங்காமல் துறவியர்போல் வாழ்ந்தார்,
ஊராளத் துடிக்கவில்லை! அடிசூடும் அரசு!

உடன்பிறவாச் சகோதரனுக்(கு) அரசு – செல்வம்
உவந்தளித்த கதை அன்றும் நடந்த துண்டு!
கடனுக்கே "உடன்பிறப்பே" என்றழைக்கும்
கதை எல்லாம் அன்றில்லை! ஓடம் விட்ட
திடமுடைய குகனென்னும் வேடன் தன்னைத்
திருமிக்க இராமன், தன் இளையோன் என்றான்!
அடலேறாம் குகனுடைய சாதி காணான்,
அவன்குலத்தைக் கருதவிலை! குணமே கொண்டான்!

(இன்று)
சாதிகளே இல்லையென்பார்! தம்பிள்ளைக்குத்
தம்சாதியில் பார்த்தே மணம்செய் விப்பார்!
பேதமொரு சிறிதின்றிக் குரக்கு இனத்தில்
பெற்றானோர் இளையவனை – இராம நம்பி!
நீதிநெறி நின்றவானம் வீடணன்தன்
நிறம் காணான், குலம்காணான் – தம்பியாக
ஆதியிலே மகிழ்ந்தேற்றான் இராமன்! அன்றே
இளையவர்கள் அறுவர்க்கும் அண்ண னானான்!

சாதிக்கே ஒருகட்சி – அன்றைக் கில்லை!
தருமத்துக் கொருகட்சி – இருந்த தங்கே!
நீதிக்கே முதலிடத்தைத் தந்தவர்தாம்
சிலையான ஆட்சியினைச் செய்துவந்தார்!
பேதமிலா(து) அரசாண்ட மன்னருக்குப்
பின்பிறந்த இளையோர்கள் துணைநின்றார்கள்!
தீதறியாத் தம்பியரைப் பெற்ற அண்ணன்
தெவ்வர்க்கு அஞ்சானென்றான் தெய்வக் கம்பன்!

இளையவர் எனில் தம்பியராம்! இளம்பெண்ணுக்கும்
இளையரென இலக்கியத்தில் பொருள் காண்கின்றோம்
இளையவர்கள்..... அறுவர்தம் – இராமானுக்கே!
இராவணனுக்கும் அறுவர் தம்பி மார்கள்!
களைகள்போல் இடர்செய்யும் இளைஞர் – எந்தக்
கட்சியிலும் இடம்பெற்றோர் அல்லர்! நல்ல
விளைவுகளைச் சொல்வதெனில் நீளும், அண்ணன்
விருப்பத்தை நிறைவேற்றும் இளையர் அன்னார்!

"அண்ணன் இராமன்காடு செல்வான்" – என்றே
அறிந்தஉடன் இலக்குவனோ சினந்தெழுந்தான்!
மண்டலமோ சிதறிடுமோ! எனப்பயந்தார்
மாவீரன் கையினில் "வில்" எடுத்த போது!
உண்ணவிலை, உறங்கவிலை! கால் நிழல்போல்
உயிர்போலும் அண்ணனையே தொடர்ந்து சென்றான்!
மண்ணிலொரு மாற்றாந்தாய் மைந்தன் – இந்த
மாண்பினையே உலகுக்குக் காட்டினான்காண்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பரதன் – தன் தாய்பெற்றுத்தந்த ஆட்சி
பாரில் ஒரு துகள் – எனவே ஒதுக்கித் தள்ளி
விரதங்கள் மேற்கொண்டு, பதினான் காண்டு
மெய்தவமே மேற்கொண்டு வாழ்ந்து வந்தான்!
உரனுடைய சத்ருக்னன் – பரதனுக்கே
உற்றபல தொண்டாற்றும் தம்பியானான்!
சரணாக அண்ணனையே அடைந்த தம்பி
மார்களது சரிதந்தான் இராம காதை!

இலங்கையர்கோன் தம்பியர்கள் இணையில் லாதோர்
இவர்களிலே கும்பகர்ணன் பெரிய வீரன்!
துலங்குமொரு வீடணனோ கட்சி மாறித்
துறைகடந்தான்! இராமனுக்குத் தம்பியானான்!
கலங்கலிலா மகோதரன், மாபார்சவன், நற்
கரனோடு திரிசிரசு, தூடணர்கள்
இலங்குபெரு வீரர்களாம்! இளையராக
இருந்தாலும் இராவணற்கே உயிர்கொடுத்தார்!

இந்திரசித்தன் என்பான் இணையில்லா வீரன்!
இவனுக்கே இளையவராய் இருந்தார்கள் இருவர்!
தந்திரங்கள் வல்ல – அக்ககுமாரன் அதிகாயன்
தனிவீரம் கம்பனிலே தலைநிமிர்ந்து நிற்கும்!
விந்தைமிகு இளையர், இவரால் நடந்தது அன்று
விறல்மிகுந்த இராவணனின் பேராட்சி என்போம்!
மந்திரக் கம்பன் – தந்த வனப்புமிக கதையை
மாண்புடைய இளையவரே வழிநடத்து கின்றார்!

மூத்தவனின் பின்பிறந்தோர் இளையர் என்றோம்!
முதிராத பெண்களையும் "இளையர்" என்பர்!
கூத்தறிந்த இளம்பெண்கள் பூப்பந் தாடிக்
கும்மாளம் போடுவதை இனிக்கச் சொன்னான்!
சாத்திரங்கள் பலகற்ற கம்ப வள்ளல்!
சதிரான இளம்பெண்கள் தம்மை எல்லாம்
பாத்திரங்களாக்கிக் – காதலர்க ளோடு
பகர்காமச் சுவைக்கடலில் மூழ்க வைத்தான்!

இளையள்

வண்டுபோல் விழியுடையள்! மாரன் வில்போல்
மயங்குகின்ற புருவத்தள்! ஒளிநிலாவின்
துண்டம்போல் நெற்றியினள்! நெஞ்சை அள்ளும்
தாமலர்போல் செவ்வாயள்! தேனிற் செய்த
பண்டம்போல் மொழியுடையள்! தந்தத் தால்செய்
பாவைபோல் மேனியினள்! கருத்தெழுந்த
கொண்டல்போல் கூந்தலினள்! இளநீர் காய்த்த
கொடிபோலும் இடையுடையள்!இளையள் என்றான்!

கம்பன்காட்டும் இளையோர் தம்மைக் காட்டக்
கவிகம்பன் கழகத்தார் ஆணை இட்டார்!
செம்பொன்காட்டும் குன்றை வெட்டி வந்து
சிலைசெய்து காட்டென்று பணித்தல் போலே
தெம்புடையார் காட்டுகின்ற செயலை இந்தத்
திறன் இல்லான் பாட்டினிலே காட்டல் ஆமோ?
நம்பிவந்தேன் பூவினையும் சூடுவோர், இந்
நாரினையும் ஏற்பர்எனும் துணிவினாலே!

முதல் நூல்

இந்திய மொழிகளில் அச்சடிக்கப்பட்ட முதல் நூல் தமிழ் நூல்தான். "டாக்ட்ரினா கிறிஸ்டம்" என்ற நூலை ∴பாதர்கள் என்ரிக்யூல், மானுவல் டிசாவோ ஆகியோர் தமிழில் தம்பிரான் வணக்கம் என்ற பெயரில் மொழி பெயர்த்து 1578 ஆம் ஆண்டு 160 பக்கங்கள் கொண்ட நூலாக அச்சடித்தார்கள். கேரளாவின் மலபார் மாவட்டத்தில் உள்ள கொல்லத்தில்தான் இந்தத் தமிழ் நூல் அச்சடிக்கப் பட்டது.

தமிழ் நாட்டில் முதன் முதலாகத் தரங்கம்பாடியில்தான் முதல் தமிழ்நூல் அச்சடிக்கப் பட்டது. 1723 ஆம் ஆண்டு அச்சடிக்கப் பட்டது விவிலிய (Biblia Damulica) என்ற நூலாகும்.

–இரவிச்சந்திரன்

பிரான்சு அருள்மிகு ராதா கிருட்டினா ஆலயம் நடத்திய பகவத்கீதை எழுத்துப்போட்டி

பிரான்சு அருள்மிகு ராதா கிருட்டினா ஆலயம் நடத்திய பகவத்கீதை எழுத்துப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் பெயரும், பெற்ற மதிப்பெண்களும்:

மேற்பிரிவு: நளாயினி விசயகுமார் 34.75 புள்ளிகள், லோகதர்சினி 34 புள்ளிகள், மங்களகௌரி 34 பு, பத்மராச் 20.5 பு, சிவகுமார் 18.75 பு, சிவந்தினி 18.75 பு, பாமினி 18.25 பு, மயூரன் 17.5 பு, விவேகானந்தன் 17.5 பு, கனகபாரதி 12 பு, சுதர்ணன் 10.5 பு, மகிழ்நங்கை 8.5 பு, மோகன் 5.75 பு, போல் சேன் சோசப் 5.75 பு, இராசன் 3.25

மத்தியப்பிரிவு: மனோகரன் சங்கீதா 58 புள்ளிகள், பரமநாதன் பகீரதி 47 புள்ளிகள், மனோகரன் குணசீலன் 42.5 பு, மதியாபரணம் சரிதா 34 பு, சுதர்சினி 31 பு, சீர்தரன் செயமாலினி 26.5 பு, சீர்தரன் கோமளா 19.5 பு, கனகராசா அபிராமி 33 பு, பிரஞ்சு மொழியில் எழுதியவர்கள்: சீர்காந்தன் 24 பு, சீர்காந்தன் யுவான் 23 பு, செயபாலன் சுவாச்ரிகா 18பு.

கீழ்ப்பிரிவு: மதியாபரணம் சட்ரிகா 98 புள்ளிகள், சிவராமலிங்கம் சுசன் 67 பு, சுதர்சன் 45 பு, கேசுகி 35 பு, குகாந்தினி 27 பு, முத்து சிவராசா 24 பு, பவித்ரா 18 பு, பிரஞ்சு மொழியில் எழுதியவர்கள்: சீர்காந்தன் 25 பு, செயபாலன் 23 பு.

ஆரம்பப்பிரிவு: செனன் முதல் இடத்தையும், அருளாளன் இரண்டாம் இடத்தையும், நிவோதா மூன்றாம் இடத்தையும், நிலானி நான்காம் இடத்தையும் பெற்றுள்ளனர்

"வாயை மூடு" என்று முட்டாள் தன் மனைவியைத் திட்டுகிறான். நீ அமைதியாக இருக்கும்போது எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா? என்கிறான் புத்திசாலி. இதுதான் புத்திசாலி கணவனுக்கும், முட்டாள் கணவனுக்கும் உள்ள வேறுபாடு.

– வாரியார் கூறியது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவுத்திறன் – பு . மயூரன்



இடமிருந்து வலம்

1. பகுத்தறிவுப் பகலவன் 3. அழிவு 4. செய்யுள் 5. மெல்லிசை மன்னர் விஸ்வனாதனை சுருக்கமாக இவ்வாறு அழைப்பர் (1.1.1) 7. ஒரு குளிர்ந்த இடம் 8. ஆண்டாளை இப்படியும் அழைப்பர். 10. செருக்குக் குழம்பியுள்ளது. 12. ஒருவித முள்செடி. (4) 13. தடவுதல். (5) 15. அச்சம். 16. விடம் குழம்பியுள்ளது. 18. சிறுதொகை குழம்பியுள்ளது. 20. பாலின்மேல் படர்வது. 21. தற்போது உங்கள் கையில் இருப்பது.

வலமிருந்து இடம்

9. அபகரி. 17. பார்புகழும் கொடைவள்ளல் 19. பெண்களின் ஆடைவகைகளில் ஒன்று(3) .

மேலிருந்து கீழ்

1. படிப்பறிவில்லாதவன் 2. புதிய திரைப்படம் 3. இயக்குனர் திலகம். 6. கனியினுள் இருப்பது(2). 8. கலைஞர் திரைக்கதை வசனத்தில் வெளிவந்த சிலப்பதிகாரத் திரைப்படம். 11. க ச ட த ப ற. 12. பத்துப்பாட்டு நூல்களில் ஒன்று, நக்கீரர் எழுதியது.13. ஐவகைப் பாக்களில் ஒன்று.

கீழிருந்து மேல்

14. இந்துக்களின் புனித தலமாகக் கருதப்படுவது(2). 19. ஒருவகை மீன் 21. இளமையில் .... என்றார் ஔவை. 22. வெற்றி பெற்றவர்களுக்குக் கெடுக்கப்படுவது.

அறிவுத்திறன் சென்ற இதழின் விடைகள்

இடமிருந்து வலமாக:

1. வீரமாமுனிவர் இயற்றியது – தேம்பாவணி, 3. துணிகரச் செயல் – சாகசம். 6. நிபுணர் – வல்லுனர். 7. புனித இடம் – தலம். 8 நெருப்பு குழம்பியுள்ளது – தழல். 9. காப்பியத்தின் பெயர் – குண்டலகேசி. 10. தமிழ்நாட்டு முன்னாள் முதலமைச்சர் குழம்பி உள்ளார் – பக்தவத்சலம் 13. படையை நடுங்கச் செய்யும் – பாம்பு 14. கேரள நடனம் – கதகளி 15. வழிபாட்டுக்குரிய சொல் – துதி 16.இராவணன் – தசமுகன் 19 சோழ மன்னன் – கரிகாலன் 20. பாணம் தலை கீழாக உள்ளது –அம்பு 23. சிரிக்கவும் சிந்திக்கவும் செய்வான் – விகடகவி 24. வள்ளலின் பெயர் – பாரி

மேலிருந்து கீழாக

1. அர்சுனனின் போர்ச் சங்கு – தேவதத்தம் 2. திரைப்படத்தின்பெயர் – பாலும்பழமும் 4. சித்தார்த்தரின் நகரம் – கபிலவச்து 5.ஒழுங்கு தலைகீழாகவுள்ளது – கச்சிதம் 9. நில ஒப்பந்தம் – குத்தகை 18. ஒருவகை மான் – கவரி 11. காளிதாசனின் காவிய நாயகி – சகுந்தலை 12. செய்யுள் தலைகீழாக உள்ளது – பாடல் 17. காடும் காடு சார்ந்த இடமும் – முல்லை 21. சிங்கம் மாறியுள்ளது – அரி 22.துறவிகள் அணியும் ஆடையின் நிறம் –காவி

ஐந்தின் மகிமை

ஐம்பொறி – மெய், வாய், கண், மூக்கு, செவி.

ஐம்புலன் – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

ஐம்பூதம் – மண், நீர், காற்று, தீ, விண்.

ஐம்பெருங்காப்பியம் – சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

ஐம்பெருங்குரவர் – அரசன், குரு, தந்தை, தேசிகன், மூத்தோன்.

ஐவகை நிலம்– குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

ஐவகை இலக்கணம் – எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

ஐவகைத் தந்தையர் – பிறப்பித்போன், கற்பித்தோன், மணம் முடித்தோன், அன்னம் தந்தோன், ஆபத்துக்கு உதவினோன்.

ஐவகைத் தாயர் – ஈன்றதாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கை[illegible]த்தாய், செவிலித்தாய்.

ஐவகை இசைக்கருவி – தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு.

ஐவகைக் கன்னிகையர் – அகலிகை, திரௌபதி, சீதை, தாரை, மண்டோதரி.

ஐவகை வண்ணம் – வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை.

ஐம்பெரும் குற்றம் – கொலை, களவு, பொய், கள்ளருந்துதல், குருநிந்தை.

ஐவகைத் தொழில்கள் – படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.

ஐவகைக் கருமேந்திரியங்கள் – வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

ஐவகைப் பாக்கள் – வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா. (தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிறுவர் விருந்து

பு. மயூரன்

தொடர் கதை

கயல்விழி

நெய்தல் நாட்டை மதிவாணன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனது நாடு பல இயற்கை வளங்களைக் கொண்டிருந்தது. பார்க்கும் இடமெல்லாம் சோலைகளையும் ஓங்கி உயர்ந்த மரங்களையும் தன்னகத்தே கொண்டிருந்தது. எங்கும் மலர்களின் நறுமணம் மக்களின் மனத்தைக் கொள்ளை கொண்டது. அவனது ஆட்சியில் மக்கள் ஒரு குறையுமில்லாது வாழ்ந்து வந்தனர். அவனது நாட்டில் நீர்வளமும் நிலவளமும் சிறந்து விளங்கின. மாதம் மும்மாரி பொழிந்தது. அண்டை நாடுகளின் மீது படை எடுத்து அவர்களை அடிமைப் படுத்தாமல் அவர்களுடன் நட்புறவு பூண்டு நல்லாட்சி நடத்தி வந்தான். அவனது நாட்டை மேலும் அழகுறச் செய்தது அவனது நாட்டில் வற்றாமல் பெருக்கெடுத்து ஓடும் பொய்கை நதி, அது அவனது கோட்டையைச் சுற்றியும் ஓடி அவனது கோட்டையையும் அழகுறச் செய்தது. அவனது பட்டத்தரசி அமுதவல்லி தன் கணவருக்கு ஏற்றவளாக எல்லாவகைகளிலும் சிறந்து விளங்கினாள். இரவு நேரங்களில் மன்னன் நகர்வலம் வந்து குடிமக்களின் இன்னல்களை அறிந்து உடனுக்குடன் அவற்றை நீக்கினான். கல்விச்சாலை, மருத்துவமனை, அறிவாலயம், உணவுச்சத்திரம் போன்றவற்றை நியமித்து நாட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றான். நன்கு கற்றறிந்த தமிழ்ப் புலவர்களைச் சிறப்பித்துப் பரிசுகள் வழங்கி வந்தான். புலவர்களும் அவனை வாயார வாழ்த்திப் பல பாடல்களைப் பாடி வந்தனர்.

ஒரு நாள் மன்னன் மதிவாணன் தனது பூங்காவில் இயற்கை அழகைப் பார்த்து மகிழ்ந்தபடி உலாவிக் கொண்டிருந்தான். அப்போது அமைச்சர் இளங்கதிர் முச்சிரைக்க ஓடிவந்தார். "என்ன அமைச்சரே ஏதாவது அவசரமா" என்று வினாவினான் மன்னன். "இல்லை மன்னா சற்று என்னுடன் வாருங்கள்" என்று ஒரு மறைவான இடத்திற்கு அவனை அழைத்துச் சென்ற அமைச்சர் கூறத்தொடங்கினார் "மன்னா! தங்கள் உயிருக்கும் அரசியார் உயிருக்கும் ஆபத்து உடனே நீங்கள் இருவரும் இங்கிருந்து வெளியேற வேண்டும்" என்றார் அமைச்சர். "என்னது எங்கள் உயிருக்கு ஆபத்தா" வெகுண்டான் மன்னன். "என்ன சொல்கிறீர்கள் அமைச்சரே" "ஆமாம் அரசே படைத்தளபதி வல்லாளனும் அரசகுரு பொன்முடியாரும் சேர்ந்துகொண்டு தங்கள் இருவரையும் தீர்த்துக்கட்ட மாபெரும் சதி திட்டம் தீட்டியுள்ளனர். சற்றுமுன்தான் எனது ஒற்றன் வழியாகச் செய்தியறிந்தேன். சிறிது நாட்களாக இவர்கள் இருவரினதும் நடவடிக்கைகளில் சற்று மாறுதல் ஏற்பட்டதால் எனது ஒற்றனை, இவர்கள் இருவரையும் கண்காணிக்கச் சொல்லியிருந்தேன். இருந்தாலும் இவ்வளவு பெரிய சதி நடப்பதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை நீங்கள் இங்கிருக்கும் ஒவ்வொரு வினாடியும் தாங்கள் உயிருக்கு ஆபத்து" எனக்கூறி நீண்ட பெருமூச்சு விட்டார் அமைச்சர் இளங்கதிர். "என்ன அமைச்சரே யாருக்கும் எவ்வகைக் கெடுதலும் எண்ணாத எனக்கு எதிரிகளா" என்று திகைப்புடன் வினாவினான் மன்னன் மதிவாணன். "மன்னா பாம்பிற்குப் பாலை வார்த்தாலும் அது நஞ்சைத்தான் கக்கும் வல்லாளனும். பொன்முடியாரும் கொடிய பாம்புகள் எனவே நாம்தான் இனிமேல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றார் அமைச்சர். உடனே தன் உடைவாளை உருவிக்கொண்டு விரைந்த மன்னனைத் தடுத்தார் அமைச்சர். அமைச்சரே நான் எதிரிகளையும் மன்னிப்பவன் ஆனால் துரோகிகளை எக்காரணங்கொண்டும் மன்னிக்கமாட்டேன் என்று கூறினான் மன்னன் —தொடரும்

கண்டுபிடிக்கவும்

பெண்கள் இருவரின் முகங்கள் இப்படத்தில் உள்ளன

வள்ளுவர் சொன்ன பொய்

ஒரு வேடன் வேகமக ஒரு மானைத் துரத்தி வருகிறான், அழகான புள்ளிமான் குட்டி. அது துள்ளி ஓட வேண்டிய தோட்டத்தில் ஓடவிடாமல் அதைக் கொன்றுவிட வேண்டும் என்கிற விருப்பத்தோடு வேடன் துரத்தி வர, அது எங்கெல்லாமோ சுற்றி இறுதியாக வள்ளுவரின் இல்லதிற்குள்ளே நுழைந்துவிட, வாயிற்புறத்திலே உட்கார்ந்து குறள் தீட்டிக் கொண்டிருக்கிற வள்ளுவர், தன்னைக் கடந்து தன் வீட்டிற்குள்ளே மான்குட்டி சென்றதைக் காணுகிறார். பத்து நிமிடத்திற்குப் பிறகு வேடன் அங்கே ஓடி வருகிறான். வள்ளுவரைப் பார்த்துக் கேட்கிறான் "இந்தப் பக்கம் ஒரு மான் குட்டி வந்ததா ?"

பொய் சொல்வதே தீது என்று கருதுகிற வள்ளுவர் என்ன சொல்லியிருக்க வேண்டும் ? "ஆமாம். வந்தது. வீட்டிற்குள்ளேதான் இருக்கிறது" என்று சொல்லியிருக்க வேண்டும். சொல்லவில்லை. சொன்னால் வேடன் உடனே உள்ளே நுழைந்து அந்த மான் குட்டியை இழுத்துச் சென்று கொன்று தின்று இருப்பான். எனவே 'வரவில்லை' என்கிறார். வள்ளுவரா பொய் சொல்வார் என்று எண்ணிக்கொண்டு வேடனும் வேறு பக்கம் போய்விடுகிறான் பெருந்தகையே தாங்கள் இப்படி ஒரு பொய் சொல்வதற்குப் காரணம் என்ன ?

அப்பொழுதுதான் வள்ளுவர் சொல்கிறார் "நான் சொன்னது பொய்யா ? உண்மையா ? என்பதல்ல. வாய்மையா அல்லவா என்பதை ஆராய்ந்து பார். பிறருக்குத் தீங்கு செய்யாத ஒன்றைச் சொன்னால் அதற்குப் பெயர் வாய்மை. எனவே நான் சொன்ன பொய்யையும் அந்த வாய்மையிடத்தில் வைக்கப்படும்.

பொய்ம்மையும் வாய்மை இடத்தே புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின் – (குறள் – 292)

(நன்றி – கலைஞரின் குட்டிக்கதைகள்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காதல் நாற்பது

கவிஞர் கி . பாரதிதாசன்

21 பொன்மேலே வைரத்தைப் பதித்தாற் போலே
பொலிகின்ற பேரெழிலே! அழகின் ஊற்றே!
என்மேலே உனக்கென்ன கோபம் அன்பே?
ஏனின்று வெறுப்பாக இருக்கின் றாயே?
விண்மேலே தவழ்கின்ற நிலவைக் கண்டு
விரும்புகின்ற உயிரினங்கள் அனைத்தும் போல
உன்மேலே நான்வைத்த காத லாகும்
ஓடிவந்தே இன்பத்தைத் தாராய் கண்ணே!

22 பக்கத்தில் அமர்ந்திருந்த போதும் ஏனோ
பார்க்காமல் இருப்பதுபோல் நடிக்கின் றாயே?
வெட்கத்தில் ஆசைதனை அடக்கப் போமோ?
விஞ்சுகின்ற கன்னியிளந் தென்றற் காற்றே!
சொக்குதடி உன்னழகால் என்றன் உள்ளம்!
சுடர்விழியே உனைக்கண்டால் இன்பம் பொங்கும்!
விக்குதடி! வேர்க்குதடி! அன்பே காதல்
விருந்துண்டு களித்திடலாம் வாராய் கண்ணே!

23 அத்தானென்(று) ஒருமுறைதான் அழைத்தால் என்ன?
ஆசையுடன் முத்தங்கள் கொடுத்தால் என்ன?
முத்தமிழின் நற்றேனைச் சுவைத்தால் என்ன?
மோகமெனும் கடலுக்குள் குளித்தால் என்ன?
பித்தாய்உன் நிழலாக அலைந்தால் என்ன?
பேரின்பக் காட்சிகளைக் கண்டால் என்ன?
அத்தானின் திருமார்பில் அகலா தென்றும்
அரவணைத்துப் பொழுதெல்லாம் களித்தால் என்ன?

24 உன்கரமும் என்கரமும் ஒன்றாய்ச் சேர்ந்தே
உவக்கின்ற திருநாளைக் காண்ப தென்றோ?
கண்துயிலும் கனவெல்லாம் நினைவா யாகிக்
கலைமேவும் நல்வாழ்வைப் பெறுவ தென்றோ?
விண்ணுலவும் வெண்ணிலவை நாம ழைத்தே
விளையாடி மகிழ்கின்ற காலம் என்றோ?
பொன்மயிலே! பூந்தமிழே! புலவன் கூறும்
புகழுரையை ஏற்றிடவே வாராய் இங்கே!

25 தேரோடும் தெருவினிலே தேவி யுன்றன்
திருமுகத்தைக் கண்டமுதல் தூக்கம் இல்லை!
சீரோடும் சிறப்போடும் திகழ்ந்த என்னைத்
திண்டாடச் செய்தனையே! ஏக்கத் தாலே
ஊரோடும் உறவோடும் பேச வில்லை!
உன்நினைவால் நாள்தோறும் பெருகும் தொல்லை!
பேரோடும் புகழோடும் பெருமை யோடும்
பெருவாழ்வு வாழ்ந்திடலாம் வாராய் பெண்ணே!

(தொடரும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்